S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் டிசம்பர் 30 * 2025 * மலர் -1 * இதழ்-212* VOL-1 * ISSUE-212 விலை ரூ.3 * பக்கம் -4

# பல்லடத்தில் தி.மு.க. மகளிரணி மேற்கு மண்டல மாநாடு!

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், உதயநிதி பங்கேற்பு!!



திருப்பூர், டிச.30–

திருப்பூர்மாவட்டம் பல்லடத்தில் இன்று தி.மு.க. மகளிர் அணி மேற்கு மண்டல மாநாடு நடைபெறுகிறது. இதில், முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். இதையொட்டி, 2,200க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு உள்ளனர். பல்லடம் அருகேயுள்ள காரணம்பேட்டையில் 'வெல்லும் தமிழ் பெண்கள்' என்ற தலைப்பில் நடைபெறும் திமுக மகளிரணி மேற்கு மண்டல மாநாடு இன்று மாலை 4 மணியளவில் நடைபெறுகிறது. தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி. தலைமை தாங்குகிறார். இந்த மாநாட்டில் மேற்கு மண்டலத்தை சேர்ந்த 1.50 லட்சம் பெண்கள் கலந்து கொள்கின்றனர்.

மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி, கனிமொழி எம்.பி. ஆகியோர் பங்கேற்று சிறப்பு ரையாற்றுகின்றனர்.

மாநாட்டில், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், சு.முத்துசாமி, கயல்விழி செல்வராஜ், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி உள்ளிட்டோர் பேசுகின்றனர்.

மகளிர் மாநாட்டில் பங்கேற்கும் அனைவருக்கும் 13 வகையான உணவு வகைகளுடன் மதிய விருந்து வழங்கப்படுகிறது. மாநாட்டின் நிறைவாக தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

இதில் பங்கேற்பதற்காக முதல்வர் ஸ்டாலின் இன்று காலை 11 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை வந்தார். விமான நிலையத்தில் அவருக்கு கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உற்சாகவரவேற்புஅளித்தனர்.

அங்கிருந்து சின்னியம் பாளையத்தில் உள்ள நட்சத்திரஹோட்டலில்சிறிது நேரம் ஓய்வெடுக்கிறார். பின்னர் முதல்வர் ஸ்டாலின் மாலை 4 மணிக்கு கார் மூலம் பல்லடம் செல்கிறார். மாநாடு முடிந்த பின்னர் இரவு கோவை விமான நிலையத்துக்கு வந்து, சென்னைக்குப் புறப்பட்டுச் செல்கிறார். இதேபோல, துணை முதல்வர் உதயநிதி இன்று மதியம் 1 மணிக்கு கோவை வந்து, அங்கிருந்து பல்லடம் செல்கிறார். மாநாடு முடிந்த பின்னர் கோவை சின்னியம்பாளையத்தில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் தங்கும் அவர், நாளை ஆர்.எஸ்.புரத்தில் கட்டப்பட்டுள்ள மாநகராட்சி ஹாக்கி மைதானத்தை திறந்து வைக்கிறார்.

பின்னர், கோவையிலிருந்து ஈரோட்டுக்குப் புறப்பட்டுச் செல்கிறார். முதல்வர், துணை முதல்வர் வருகையையொட்டி கோவை மாநகர காவல் ஆணையர் ஆ.சரவணசுந்தர் , எஸ்.பி. கார்த்திகேயன் தலைமையில் 1,000 போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனர்.

இதேபோல, திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் மாநாடு நடக்கும் இடத்தில் மேற்கு மண்டலஐ.ஜி. செந்தில்குமார் தலைமையில் 1,200 போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



திருப்பூர் மாவட்டத்தில், "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" கழக மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.







## புதுக்கோட்டை அருகே ஒரே நேரத்தில் 400-க்கும் மேற்பட் ட கராத்தே கட்டாக்களை செய்து அசத்தல்!

### அமைச்சர் மெய்யநாதன் வியந்து பார்த்து பாராட்டு!!

புதுக்கோட்டை டிச.30

புதுக்கோட்டை அருகே ஒரே நேரத்தில் 400க்கும் மேற்ப ட்ட கராத்தே கட்டாக்களை செய்து காட்டும் நிகழ்வு கொத்தமங்கலம் பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே கொத்தம ங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இ ப்பள்ளியில் கராத்தே தகுதி ப்பட்டை மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு ரஞ்சித் அனைவரையும் வரவேற்றார். பள் ளியின் தலைமை ஆசிரியர் யோகாராஜா தலைமை தா ங்கினார்

கொத்தமங்கலம் உதவி தலைமை ஆசிரியர் முத்துக்கு மார் சிபிஐ கட்சியின் மாவட்ட செயலாளர் செங்கோடன் திருமங்கலம் பேரூராட்சி தலைவர் சிவக்குமார் குருகுல ம் பள்ளியின் தாளாளர் சிவனேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. விழாவில் தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அ மைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தகுதிப் பட்டை மற்றும் சான்றிதழ் வழ ங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது அமைச்சர் முன்னிலையில் 400க்கும் மேற்ப ட்ட கராத்தே பயிற்சி பள்ளி சிறுவர் சிறுமியர்கள் ஒரே நேரத்தில் கராத்தே கட்டாக்களை செய்து அசத்தினர் மா ணவர்களின் இந்த செயலை அமைச்சர் வியந்து பார்த் தார்.

இதனை அடுத்து மாணவர்களிடையே பேசிய அமைச்சர் மெய்யநாதன், அதிகாலையில் கராத்தே உள்ளிட்ட உடற் பயிற்சிகள் செய்வதால் மனம் அமைதியாகவும் கோபம் இல்லாமலும் நாள் முழுவதும் உற்சாகமாக இருக்கும் எனவும் இந்த சிறு வயதில் இருந்தே இந்த உடற்பயிற்சி யில் ஈடுபடும் மாணவர்களை தொடர்ந்து இந்த பயிற்சி களை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

இதனை அடுத்து பள்ளியில் புதிதாக அமைச்சர் நிதியி ல் இருந்து கட்டப்பட்டு வரும் 8 வகுப்பறை கட்டிடத்தை பார்வையிட்டார்

அத்தோடு பசுமை பள்ளியாக அறிவிக்கப்பட்டு செயல் பட்டு வரும் இப்பள்ளியில் பசுமை தோட்டத்தை பார்வை யிட்ட அமைச்சர் அதில் குறிப்பாக வெண்டைக் காய் செ டி சேதமடைந்து சரியில்லாமல் இருப்பதாகவும், இனிமேல் பூச்சிக் கொள்ளிகள் தெளிக்க வேண்டாம் எனவும், உடனடியாக அதை மாற்றி விட்டு புதிய கன்று களை நடவு செய்யுமாறு அறிவுறுத்தினார்.

விழாவில் பள்ளி வளாகத்தில் மரக்கன்று நடப்பட்டது. அனைவருக்கும் கராத்தே சார்பில் மரக்கன்றுகள் வழங் கப்பட்டது. மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை கழக தி முக நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் பள்ளி கல் வித்துறை மற்றும் கராத்தே பயிற்சியாளர்கள், மாணவ ர்கள் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் தேசிய நடுவர் தமிழ்நாடு சிலம்பாட்டக் கழகம் சிலம்பப்பாசறை நிறுவனர் மற்றும் தலைமை பயிற்சியாளர்கள் தமிழரசன் நன்றி கூறினார்.

## பைக் மீது வேன் மோதி 2 ஐ.டி.ஐ. மாணவர்கள் பலி!

### நள்ளிரவில் விபத்து!!

நெல்லை, டிச.30–

நெல்லை மாவட்டம் உவரி அருகே உள்ள பெரிய தாழை சுனாமி காலனியை சேர்ந்தவர் ராஜ் மகன் யோசுவா(21). அங்குள்ள ஜார்ஜியார் நகரை சேர்ந்த சாலமோன் (20). நணபர்களான இவர்கள் இருவரும் திருச்செந்தூர் பகுதியில் உள்ள ஒரு ஐ.டி.ஐ.யில் படித்து வந்தனர்.





இந்நிலையில் நேற்றிரவு யோசுவா, சாலமோன் ஆகிய இருவரும் ரேஸ் பைக்கில் உவரிக்கு சென்றிருந்தனர். பின்னர் அங்கிருந்து ஊருக்கு திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

இதையடுத்து பெரியதாழை நோக்கி சென்று கொண்டிருந்த போது கூட்டப்பனை அருகே முன்னால் சென்ற வாகனத்தை முந்தி செல்ல முயன்றனர்.

அப்போது எதிரே வந்த வேன் எதிர்பாராத விதமாக பைக் மீது மோதியது.

இதில் யோசுவா மற்றும் சாலமோன் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்து ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தனர்.

இதனை அந்த வழியாக சென்றவர்கள் பார்த்து அவர்கள் இருவரையும் மீட்டு சிகிச்சைக்காக பாளை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே யோசுவா மற்றும் சாலமோன் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து உவரி போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படவுள்ள இந்திய, சர்வதேச இளையோர் பாய்மரப் படகுப் போட்டி சாம்பியன்ஷிப் 2026 (SDAT INDIA INTERNATIONAL YOUTH SAILING CHAMPIONSHIP IIR ) மற்றும் 5150 டிரையத்லான் சென்னை 2026 போட்டிகளுக்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.



விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி வெற்றிலை முருகன்பட்டியில் பயணியர் நிழற்குடை கட்டிடத்தைநிதி அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்தார்.

### ஆந்திர மாநிலம் அருகே

## ரெயிலில் தீ பிடித்த விபத்தில் பயணி கருகி பலி !

அனகாபள்ளி, டிச. 30

ஆந்திரமாநிலம், அனகாபள்ளி அருகே இன்று அதிகாலை 1 மணியளவில் எலமஞ்சிலி ரெயில் நிலையம் அருகே டாடா நகர் – எர்ணாகுளம் விரைவு ரெயில் சென்று கொண்டிருந்த போது, பேன்ட்ரி அருகே இருந்த பி1 ஏ.சி. ரெயில் பெட்டியில் திடீரென தீப்பிடித்தது. உடனடியாக இது குறித்து லோகோ பைலட்டுகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு எலமஞ்சிலி ரெயில் நிலையத்தில் ரெயில் நிறுத்தப்பட்டு உடனடியாக தீ விபத்து ஏற்பட்ட பெட்டிகளில் இருந்து பயணிகள் கீழே இறக்கப்பட்டனர். உடனடியாக தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர். அதற்குள்ளாக தீ அருகில் இருந்த மற்றொரு ரெயில் பெட்டிக்கும் மளமளவென பரவியது. இதனால் ரெயில் நிலையத்தில் இருந்த பயணிகள் அச்சத்தில் அங்கிருந்து பதறி ஓடினர். ரெயில் நிலையத்தில் பெரும் பதற்றமான சூழல் உருவானது. அனகாபள்ளி, எலமஞ்சிலி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த தீயணைப்புப் படையினர் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். எனினும் இந்த தீ விபத்தில் பி1, பி2 ரெயில் பெட்டிகள் முழுவதுமாக எரிந்து நாசமாகின. துரதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் ஒரு பயணி தீயில் கருகி உயிரிழந்தார். ரெயில்வே அதிகாரிகள் இது குறித்து கூறுகையில், அதிகாலை நேரத்தில் தீ விபத்து நடந்த சமயத்தில் ஒரு பெட்டியில் 82 பயணிகளும், மற்றொரு பெட்டியில் 76 பயணிகளும் இருந்தனர். அதிகாலை நேரம் என்பதால் அனைத்து பயணிகளும் உறக்கத்தில் இருந்தனர். தீ விபத்து குறித்து தெரிய வந்ததும், உடனடியாக பயணிகள் ரெயில் பெட்டிகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர். எனினும், பி1 பெட்டியில் பயணம் செய்த விஜயவாடாவைச் சேர்ந்த சந்திரசேகர் சுந்தர் (வயது 70) என்ற முதியவர் இந்த விபத்தில் சிக்கி தீயில் கருகி உயிரிழந்தார். அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதிகாலை 3.30 மணியளவில், சேதமடைந்த பி1, பி2 ரெயில் பெட்டிகள் மற்றும் அதனை ஒட்டி இருந்த எம்1 பெட்டியும்தனியாகபிரிக்கப்பட்டன, மீதமுள்ள பயணிகள்வேறு ரெயில் பெட்டிகளுக்கு மாற்றப்பட்டு பிறகு மீண்டும் ரெயில் இயக்கப்பட்டது இவ்வாறு கூறினர். தீ விபத்து ஏற்பட்ட ரெயிலில் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் இருந்துள்ளனர். இந்த சம்பவத்தால் அவர்கள் அனைவரும் பல மணிநேரம் கொட்டும் உறைபனியில் சிக்கித் தவித்தனர். தீப்பற்றிய இரு பெட்டிகளில் இருந்த பயணிகளின் உடைமைகள் அனைத்தும் தீயில் கருகி நாசமாயின. எலமஞ்சிலி ரெயில் நிலையத்திற்கு ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த தீ விபத்து காரணமாக, குறிப்பிட்ட வழித்தடத்தில் ரெயில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. தண்டவாள சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளபட்ட நிலையில், இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து விரிவான விசாரணை நடைபெற்று வருகிறது.




திருப்பூர்கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி, மூலனூர்கிழக்கு ஒன்றியம், வேளாம்பூண்டி ஊராட்சி, அரிக்காரன்வலசில் பாகம் எண்.278/புதிய பாகம் எண்.299க்கான "தமிழ்நாடு தலைகுனியாதுஎன் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" என்ற தலைப்பில் நடைபெற்ற செயல்விளக்க கூட்டத்தில் அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டார்.



சென்னைமாவட்டத்தில் 16 சட்டமன்றதொகுதிகளுக்கான 4,079 வாக்குச்சாவடிகளிலும், வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மேற்கொள்ளுதல் தொடர்பான சிறப்பு முகாம் நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக, தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதி, யூ1 காலனி 3வது பிரதான சாலையில் உள்ள பாத்திமா மெட்ரிகுலேஷன் பள்ளியில் நடைபெற்ற சிறப்பு தீவிரத் திருத்த பணிக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாமினை, வாக்காளர் பட்டியல் பார்வையாளர்/தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமாரவேல் பாண்டியன், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



கோயம்புத்தூர் மாநகராட்சி, காந்திபுரம் பகுதியில் அமைந்துள்ள செம்மொழிப் பூங்காவினை பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.



பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் குடியிருப்பு வாசிகள் தரும் தகவலின் அடிப்படையில், ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் உள்ளிட்ட பழைய பொருட்கள் அகற்றும் சேவை நடைபெற்று வருகிறது, இதன் ஒரு பகுதியாக, சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு 192க்குட்பட்ட நீலாங்கரை, எம்.ஜி.ஆர். தெருவில் உள்ள வீட்டிலிருந்து பழைய சோஃபாக்கள் உள்ளிட்ட பழைய பொருட்கள் அகற்றப்பட்டன.



# சேலத்தில் த.வெ.க.வினர் தர்ணா!

சேலம், டிச.30

தமிழக வெற்றி கழகத்தின், சேலம் மத்திய மாவட்டத்தின் சார்பில், கடந்த ஓராண்டாக அரசு தலைமை மருத்துவ மனை எதிர்ப்பகுதியில், இலவச நீர் மோர் பந்தல் மற்றும் மதிய வேளையில் 200 ஏழை நபர்களுக்கு அன்னதானம் வழங்கி வந்தனர்.

இந்த நிலையில், இந்த உணவுக்கூடம் அனுமதியின்றி செயல்படுவதாகவும், இதனால் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக கூறி, கடையை எடுக்க வேண்டும் என தவெக அலுவலகத்திற்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது. இதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்த தவெக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என 200க்கும் மேற்பட்டோர், மருத்துவமனை நுழைவாயில் முன்பு தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் கூறும் போது, சேலம் மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் உயர் அதிகாரி ஒருவர், இந்த இலவச உணவகம், செயல்படக் கூடாது என்ற காழ்ப்புணர்ச்சியோடு, போலிசாரின் உதவியோடு உணவகத்தை காலி செய்தே ஆக வேண்டும் என, திட்டவட்டமாக கூறியதால், தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# அமானி மல்லாபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்!

## பயனாளிகளுக்கு பி.பழனியப்பன். உணவு வழங்கினார்!!




பாலக்கோடு, டிச.30

பாலக்கோடு அமானி மல்லாபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் மாவட்டம் சுகாதார அலுவலர் ராஜேந்திரன், வட்டார மருத்துவ அலுவலர் சிவ குரு ஆகியோர் தலைமையில் நடந்தது,

இம் முகாமிற்கு மத்திய ஒன்றிய செயலாளர் முனியப்பன் தொகுதி பொறுப்பாளர் அரியப்பன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் சூடப்பட்டி சுப்பிரமணி, ஒன்றிய செயலாளர்கள் வழக்கறிஞர் கோபால், ஆனந்தன், பேரூராட்சி தலைவர் பி.கே.முரளி, வெங்கடேசன், அரசு வழக்கறிஞர் பிகே.முருகன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சந்திரசேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடாசலம், செயற்குழு உறுப்பினர் குட்டி (எ) மோகன், இளைஞரணி மகேஷ்குமார், மாணவரணி சந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இம் முகாமில் பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, எலும்பு முறிவு, பேறுகால மருத்துவம், குழந்தை நல மருத்துவம், இருதயநல சிறப்பு மருத்துவம், நீரிழிவு நோய்கான சிறப்பு மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் மற்றும் ரத்ததான உள்ளிட்ட திட்டங்களை வழங்கி தமிழக அரசு நலம் காக்கும் ஸ்டாலின் என்ற திட்டத்தை செயல்படுத்தி பொதுமக்களின் மருத்துவ தேவைகளை நிறைவேற்றி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக அமானி மல்லாபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இம்முகாமில் பொதுமக்களுக்கு முழுஉடல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டது.

இம்முகாமினை முன்னாள் அமைச்சர் பழனியப்பன் நேரில் பார்வையிட்டு மருத்துவ சேவைகள், ஆலோசனைகள் மற்றும் பரிசோதனைகள் குறித்து நோயாளிகளிடம் கேட்டறிந்தார்.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் சதிஷ் முதல்வரின் விரிவான காப்பீடு திட்ட அட்டை மற்றும் மாற்று திறனாளிகளுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர் அற்புதம் செந்தில், ஒன்றிய இளைஞரணி மணி, கவுன்சிலர் கார்த்திகேயன், மகளிர் அணி ராஜேஸ்வரி, முன்னால் கவுன்சிலர் முத்துசாமி, செழியன், மல்லாபுரம் வெங்கடேசன், வெற்றிவேல், முருகேசன், மெடிக்கல் ராஜ்குமார், முருகன், சுகாதார அலுவலர்கள் மருத்துவர்கள் அரசுத்துறை அலுவலர்கள், மற்றும் செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

முகாமில் கலந்து கொண்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு முன்னாள் அமைச்சர் பழனியப்பன் மதிய உணவினை வழங்கினார்.

# போச்சம்பள்ளி அருகே ஏரியில் மண் கடத்திய ஜேசிபி, டிப்பர் லாரியை பறிமுதல் செய்ய சென்ற அதிகாரிகள் மீது ஜேசிபி ஏற்றி கொலை முயற்சி; 2 பேர் கைது!

கிருஷ்ணகிரி, டிச.30

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த தாதம்பட்டி அருகே உள்ள ஆனந்தூர் ஏரியில் மண் கடத்தல் நடைபெறுவதாக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் அவர்களின் whatsapp எண்ணிற்கு புகார் சென்றதாக கூறப்படுகிறது. இது குறித்து மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பெயரில் ஆனந்தூர் ஏரிக்கு ஆய்வு மேற்கொள்ள ஊத்தங்கரை தாசில்தார் ராஜலட்சுமி துணை தாசில்தார்கள் சகாதேவன், நாகேந்திரன், சக்தி, ஜெயபால் வருவாய் ஆய்வாளர் ரதி ஓட்டுநர் ரமேஷ் ஆகியோர் ரகசியமாக வேறொரு காரில் ஆய்வு மேற்கொள்ள சென்றனர் அப்பொழுது ஏரியின் உள்ளே மண் அள்ளி கொண்டிருந்த ஜேசிபி மற்றும் மண் கடத்தலுக்கு பயன்படுத்திய டிப்பர் லாரி ஆகியவை ஏரியில் இருந்ததையடுத்து அதிகாரிகள் ஏரியினுள் இறங்கினர். இதில் அதிகாரிகள் வந்ததைக் கண்டு வண்டியை வேகமாக ஏரியிலிருந்து ஜேசிபி ஓட்டுனர் மற்றும் டிப்பர் லாரி ஓட்டுனர்கள் வண்டியை எடுக்க முயன்றனர் அப்பொழுது JCB ஓட்டி வந்த ஓட்டுநர் தாசில்தார் மற்றும் துணை தாசில்தார்கள் மீது ஜேசிபி முன்புற பக்கெட்டை தூக்கி ஆட்டி கொல்ல முயன்றுள்ளார்.



சுரேஷ்
கைது செய்யப்பட்டவர்

இதில் துணை தாசில்தார் சக்தி கடும் போராட்டத்திற்கு பிறகு சினிமாவை மிஞ்சும் அளவில் ஜேசிபி உள்ளே எதிரி குதித்து ஜேசிபியை ஆப் செய்தார். பின்னர் கல்லாவி போலீசாருக்கு தகவல் அளித்த நிலையில் அங்குவந்த கல்லாவி போலீசார் இந்த இடம் போச்சம்பள்ளி தாலுக்கா மற்றும் போச்சம்பள்ளி காவல் நிலையத்திற்கு சொந்தமான இடம் என்று கூறியுள்ளனர். பின்னர் போச்சம்பள்ளி போலீசாருக்கு தகவல் அளித்ததின் பெயரில் அங்கு வந்த போச்சம்பள்ளி காவல் ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன் ஜேசிபி மற்றும் டிப்பர் லாரியை பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்து விசாரணை மேற்கொண்டு நடத்தியதில் இதில் ஜேசிபி ஓட்டி வந்த ஓட்டுநர் மற்றும் டிப்பர் லாரியை ஓட்டி வந்த ஓட்டுநர் ஆகியோர் தப்பி ஓடி தலைமறைவான நிலையில் தனிப்படை போலீசார் அவர்களின் செல்போன் எண் சிக்னல் உதவியுடன் திருப்பத்தூர் அடுத்த மலையில் பதுங்கியிருந்த நிலையில் இருவரை பிடித்து விசாரணை நடத்தியதில் ஜேசிபி உரிமையாளர் கீழ் செங்கம்பட்டி கிராமத்தை சேர்ந்த தருமன் என்பவரது மகன் சுரேஷ் என்பதும் டிப்பர் லாரியை ஓட்டிவந்தவர் செங்கலு நீர் பட்டி கிராமத்தை சேர்ந்த பெரியசாமி என்பவரது மகன் தங்கபாலு என்பது தெரியவந்தது. இந்த சம்பவம் தொடர்பாக ஊத்தங்கரை தாசில்தார் ராஜ லட்சுமி கொடுத்த புகாரின் பேரில் அரசு அதிகாரிகளை பணி செய்ய விடாமல் தடுத்தல், கொலை மிரட்டல் வெடித்தல் அரசு அனுமதியின்றி கனிம வளங்கள் கொள்ளை அடித்தால் மண் திருட்டு போன்ற ஐந்து பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்த போலீசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர் இந்த சம்பவம் இப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் துன்புறுத்தல் விவகாரம் தொடர்பாக, தமிழக எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி ஒரு வருடம் ஆன நிலையில், இதுவரை நீதி கிடைக்காதது எதிர்த்து, சேலம் மாநகர் மாவட்ட அதிமுக அம்மாபேட்டை மண்டல செயலாளரும், சேலம் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவருமான யாதவமூர்த்தி தலைமையில், அம்மாபேட்டை பகுதியில் யார் அந்த சார் என்ற பதாதைகளை கையில் ஏந்தியவாறு, தமிழக அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பி, கண்டன எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.






கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், கல்லல் வட்டாரத்திற்குட்பட்ட கண்டரமாணிக்கம், சேது இராணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் கா. பொற்கொடி, தலைமையில் பார்வையிட்டார்.



# வாணியம்பாடி பேருந்து நிலையம் அருகில் ஒரு மணி நேரத்துக்கு மேலாக போக்குவரத்து நெரிசல்!

## வாகன ஓட்டிகள் அவதி!!

வாணியம்பாடி, டிச.30

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி பேருந்து நிலையம் அருகில் எல்.ஐ.சி அலுவலகம், அரசு மருத்துவமனை,, பஜார், நியூடவுன் ஆகிய முக்கிய பகுதிகளுக்கு செல்லக்கூடிய சர்க்கிளில் வார விடுமுறை என்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதன் காரணமாக வாகன ஓட்டிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.

மேலும் போக்குவரத்தினை சீர் செய்ய காவல்துறையினர் யாரும் இல்லாததால் சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாக போக்குவரத்து நெரிசலில் ஆம்புலன்ஸ் கூட அவசர சிகிச்சைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற வணிகர் சங்க பேரமைப்பு மாவட்ட தலைவர் கே.பி. எஸ்.மாதேஸ்வரன் மற்றும் பொதுமக்கள் சிலர் இணைந்து போக்குவரத்து சீர் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.



# ராஜபாளையம் அருகே நள்ளிரவில் வெறி நாய் கடித்து குதறியதில் 16 ஆடுகள் பலி!

ராஜபாளையம் டிச.30

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே ஜமீன் கொல்லங் கொண்டான் கிராமம் உள்ளது. விவசாயிகள் மற்றும் விவசாயி கூலிகள் நிறைந்த கிராமத்தில் பாண்டி என்பவர் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே ஆடுகளை கொட்டடியில் வைத்து வளர்த்து வருகிறார். நள்ளிரவில் இவரது ஆட்டு கொட்டடிக்குள் புகுந்த நாய் ஒன்று ஆடுகளை நிதானமாக கடித்துக் குதறியது. அருகில் இருந்த உரிமையாளர் பாண்டி விரைந்து வந்து நாயை விரட்டி அடித்தார். அக்கம் பக்கம் உள்ளவர்கள் வந்து பார்க்கும் போது 16 ஆடுகள் பலியாகி இருப்பது தெரியவந்தது. இது குறித்து ராஜபாளையம் வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் காவல்துறையினர் கால்நடை மருத்துவரிடம் புகார் செய்துள்ளார்.



அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தலைமையில் நடைபெற்றது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



# ஜோலார்பேட்டை அருகே உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாரத்தான் போட்டி!

திருப்பத்தூர். டிச.30

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அடுத்த பொன்னேரி பகுதியில் தமிழகத்தின் துணை முதலமைச்சரான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளரும் ஒன்றிய குழு உறுப்பினருமான உமாகண்ரங்கன் மற்றும் ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் விமாகரன் ஆகியோர் தலைமையில் 13 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலருக்கும் மாரத்தான் போட்டி நடைபெற்றது.

மேலும் இதில் சிறப்பு அழைப்பாளராக ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட செயலாளர் தேவராஜ் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரபாகரன் கலந்து கொண்டு மாரத்தான் போட்டியை கொடி அசைத்து துவக்கி வைத்தார். இந்த மாரத்தான் போட்டியில் 118 ஆண்களும், 48 பெண்களும் கலந்து கொண்டனர்.

மேலும் பெண்களுக்கு மண்டலவாடி கூட்ரோடு பகுதியிலிருந்து ரெட்டியூர் வரை 6 கிலோமீட்டர் தூரமும், ஆண்களுக்கு மண்டலவாடி கூட்ரோடு பகுதியில் இருந்து கோடியூர் வரை 10 கிலோ மீட்டர் தூரம் மாரத்தான் போட்டி நடைபெற்றது.

இந்த மாரத்தான் போட்டியில் பெண்களுக்கான போட்டியில் முதல் பரிசு என்ற தனிஷ்கா என்பவருக்கு ஏழாயிரம் ரூபாயும் இரண்டாவது பரிசு அபிநயா என்பவருக்கு 3000 ரூபாயும் , மூன்றாவது பரிசாக கீர்த்தி என்வருக்கு மூன்றாயிரம் ரூபாயும் வழங்கப்பட்டது. அது போல் ஆண்களுக்கான போட்டியில் முதல் பரிசு வென்ற லட்சுமணன் என்பவருக்கு 7000 ரூபாயும், இரண்டாவது பரிசு லோகேஷ் என்பவருக்கு 5000 ரூபாயும், மூன்றாவது பரிசு வென்ற ரஞ்சித் என்பவருக்கு 3000 ரூபாய் என மொத்தம் பத்து பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் இந்த போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பங்களிப்பு சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்த மாரத்தான் போட்டியில் திருப்பத்தூர் மாவட்டம் முழுவதும் உள்ள திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி, நாட்றம்பள்ளி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து கலந்து கொண்டனர். மேலும் இந்த மாரத்தான் போட்டி 108 ஆம்புலன்ஸ் மற்றும் மருத்துவ பாதுகாப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட கதிரம்பட்டி ஊராட்சி கோனேரிகுப்பம் பகுதியில் மாற்றுக் கட்சியைச் சாா்ந்த பெண்கள், இளைஞர்கள் அரவிந்தன், தலைமையில் 1000 மேற்பட்டோர் திமுக கழகத்தில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி முன்னிலையில் இணைத்துக் கொண்டனர். இதில் ஒன்றிய திமுக க நிர்வாகிகள், மற்றும் மாவட்ட,ஒன்றிய,நகர,நிர்வாகிகள்கட்சியின்உடன்பிறப்புகள்பலரும்கலந்துகொண்டனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்டம்,இலால்குடிநகராட்சியில்கலைஞரின்நகர்புறமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 24.04 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை நகராட்சி நிருவாக இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாகவும், தரமாகவும் மேற்கொள்ள அறிவுறுத்தினார்.



# விருதுநகர் ராஜபாளையம் உள்ளிட்ட மாவட்டம் முழுவதும் நீர் நிலை பறவைகள் கணக்கெடுப்பு!

ராஜபாளையம் டிச.30

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் அல்லது டிசம்பர் மாதம் நீர்நிலைகள் பகுதியில் வசித்து வரும் பறவைகள் குறித்த கணக்கெடுப்பு வனத்துறை சார்பில் நடைபெறுவது வழக்கம்.

அந்த வகையில் இந்தாண்டுக்குரிய நீர் நிலை அருகே வசித்து வரும் பறவைகளைகணக்கெடுக்கும்பணிதுவங்கியது. இந்த கணக்கெடுப்பில் தேர்வு செய்யப்பட்ட வனத்துறையினரும் பறவைகள் ஆர்வலர்களும் கல்லூரி மாணவர்களும் பங்கேற்றனர். விருதுநகர் மாவட்டம் முழுவதும் நடைபெறும் இந்த நீர் நிலை பறவைகள் கணக்கெடுப்பில் தேர்வு செய்யப்பட்ட கண்மாய் மற்றும் குளங்களில் கணக்கெடுப்பு துவங்கியுள்ளது. அதிகாலையில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கணக்கெடுப்பு பகுதிக்கு வனத்துறையினர் பரவை ஆர்வலர்கள் கணக்கெடுப்பாளர்கள் சென்று கணக்கெடுப்பில் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து வனத்துறை அதிகாரி ஒருவர் கூறும் போது ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் கண்மாய் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இந்த கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. காலை துவங்கிய இந்த கணக்கெடுப்பு இரு தினங்களுக்கு நடைபெறுகிறது. இந்த கணக்கெடுப்பு நிறைவடைந்த பின் விருதுநகர் மாவட்டத்தில் நீர்நிலைப் பகுதியில் எத்தனை வகையான பறவைகள் உள்ளன என்பது தெரிவிக்கப்படும் என தெரிவித்தார். நீர்நிலைப் பறவைகள் கணக்கெடுப்பு ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் துணை இயக்குனர் முருகன் உத்தரவின் பெயரில் நடைபெற்று வருகிறது. ராஜபாளையம் பகுதியில் நடைபெறும் கணக்கெடுப்பு பணிகளை ராஜபாளையம் வனச்சரக அலுவலர் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் நடைபெறும் கணக்கெடுப்பு ஏற்பாடுகளை ராஜபாளையம் வனச்சரக அலுவலர் சரண்யா, ஸ்ரீவில்லிபுத்தூர் வனச்சார அலுவலர் செல்வமணி தலைமையில் வனத்துறையினர் செய்திருந்தனர். விருதுநகர் மாவட்டம் முழுவதும் சுமார் 25க்கும் மேற்பட்ட தேர்வு செய்யப்பட்ட கண்மாய் மற்றும் குளங்களில் இந்த நீர்நிலை பறவைகள் கணக்கெடுப்பு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

# மானாமதுரையில் மதநல்லிணக்க இரத்த தான முகாம்!

சிவகங்கை டிச.30

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கிளை சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இரத்த வங்கியும் இணைந்து நடத்தும் 5வது இரத்ததான முகாம் கன்னார் தெருவில் உள்ள



தவ்ஹீத் மர்கஸ் அரங்கத்தில் மாவட்ட பொருளாளர் முகமது இஸ்மாயில் தலைமையிலும் மாவட்டத் துணை தலைவர் முகமது அனிபா, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஏ.எஸ்.முகமது , சிகாபுதீன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

முகாமில் சூசைராஜ் தலைமையிலான மருத்துவ குழுவினர் இரத்தக் கொடையாளர்களிடமிருந்து தானமாக 50 யூனிட்டுகள் இரத்தத்தை தானமாக சேகரித்தனர்.

இம்முகாமில் மானாமதுரை கிளை நிர்வாகிகள் அப்துல் நாசிர், முகமது ஹனிபா, அப்துல்சமத், சம்சுதீன், ஆசிக் உமர், சல்மான் பாரிஸ் ,சேக் அப்துல்லா ஆகியோர் உடன் இருந்தனர்.



# 9 அடி உயர மாகாளி அம்மனுக்கு மார்கழிமாத பூச்சொரிதல் விழா!

ஆண்டிபட்டி டிச.30

49 அடி உயர மாகாளி அம்மனுக்கு மார்கழிமாத பூச்சொரிதல் விழா . 108 பால்குடங்கள் மற்றும் மோட்டார் மூலம் பால் அபிஷேகம் . ஆண்டிபட்டி மற்றும் சுற்று வட்டார பகுதியில் இருந்து ஏராளமான ஆண் பெண் பக்தர்கள் பக்தி பரவசத்துடன் வழிபாடு செய்தனர்

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தேனி சாலையில் அமைந்துள்ள 49 அடி உயர மாகாளி அம்மனுக்கு மார்கழி மாத பூச்சொறிதல் விழா நடைபெற்றது.முன்னதாக யாகசாலையில் அக்னிவளர்த்து வேத மந்திரங்கள் ஓத வேள்விபூசை நடைபெற்றது.இதையடுத்து மாகாளி அம்மனுக்கு 108 பால்குடம் மூலம் பால் அபிஷேகம் மோட்டார் மூலம் பைப்பில் மாகாளி அம்மனுக்கு பால் பீய்ச்சப்பட்டு அபிஷேகம் நடைபெற்றது. அப்போது காப்புகட்டி விரதமிருந்த பெண் பக்தர்கள் குலவையிட்டும் கும்மிப்பாடல்கள் பாடியும் மாகாளி அம்மனை வழிபட்டனர்

இதையடுத்து 23 அடி உயர குதிரை வாகனத்தில் அமர்ந்துள்ள அய்யனாருக்கு பால் அபிஷேகமும் பூச்சொரிதல் விழாவும் நடைபெற்றது. இதையடுத்து கூடியிருந்த பக்தர்கள் மீது அபிஷேகம் செய்யப்பட்ட பால் பிரசாதமாக தெளிக்கப்பட்டது.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகள் கூட்டமைப்பு கூட்டம் நடைபெற்றது இதற்கு விவசாய சங்க தலைவர் அய்யூர் அப்பாஸ். தலைமை தாங்கினார்.



மதுரை செல்லூர் போஸ் வீதியில் தர்ம சாஸ்தா அன்னதான குழு சார்பில் 29&வது ஆண்டு மண்டல பூஜை நடந்தது. அன்னதானத்தை நிர்வாகிகள் கனி (எ) நாகராஜ், பாண்டியராஜ்,பால் பாண்டி, முத்துப்பாண்டி, கார்த்திக், சிவானந்தம், கணேசன், முத்து, மணி, சுந்தர், சாதிக், ஜெயராமன், மீனாட்சி சுந்தரம் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம் கருவேப்பிலங்குறிச்சி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



# தச்சங்குறிச்சியில் தமிழகத்தில் முதல் ஜல்லிக்கட்டு மைதானத்தை கே.கே.செல்லப்பாண்டியன்,சின்னத்துரை ஆய்வு செய்தனர்!

கந்தர்வகோட்டை, டிச.30

தமிழ்நாட்டின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியானது தமிழ்நாட்டிலேயே முதல் ஜல்லிக்கட்டு போட்டியாக புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் தச்சங்குறிச்சி கிராமத்தில் நடைபெற உள்ளது.

கிறிஸ்மஸ் புத்தாண்டு மற்றும் புனித விண்ணேற்பு அன்னை ஆலய திருவிழாவை முன்னிட்டு காளியம்மன் கோவில் எதிரில் உள்ள திடலில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறுவது வழக்கம் அதனை தொடர்ந்து இந்த வருடம் ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்கான முன் ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

பணிகளை திமுக வடக்கு மாவட்ட செயலாளர் கே. கே. செல்லப்பாண்டியன் கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னத்துரை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

மேலும் இந் நிகழ்வில் திமுக ஒன்றிய செயலாளர்கள் கோமாபுரம் மா. தமிழ் ஐயா மங்களாகோவில் எம். பரமசிவம், குளவாய்ப்பட்டி சண்முகம்,முன்னாள்மாவட்ட கவுன்சிலர் துவரவயல் செல்வம்,திமுக நகர செயலாளர் ராஜா ஒன்றிய கவுன்சிலர் நியூஸ் ராஜேந்திரன் மாவட்ட பிரதிநிதி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் அரவம்பட்டி முத்துக்குமார் முதுகுளம் பாலகிருஷ்ணன் முள்ளிக்காப்பட்டி ராஜேந்திரன் வடக்கு ஒன்றியதுணைச்செயலாளர்அம்பிகாபதி தெற்குஒன்றியஇளைஞரணிஅமைப்பாளர் கலையரசன் அரவம்பட்டி வேலுமயில் வடக்கு ஒன்றிய துணை இளைஞரணி அமைப்பாளர் பாலகுமாரன் கந்தர்வகோட்டை ஏ.வி. சுரேஷ் தச்சங்குறிச்சி இளையராஜா மற்றும் கிராம பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் உடனிருந்தனர்.




# எம்.குன்னத்தூர் ஊராட்சியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்!

## எம்.எல்.ஏ குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்!!

கள்ளக்குறிச்சி, டிச.30

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட எம்.குன்னத்தூர் ஊராட்சியில் தமிழக அரசின் "நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்" சிறப்பாக நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமை உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினரும், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக அவைத்தலைவருமான ஏ.ஜே. மணிக்கண்ணன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். முகாமில் பொதுமக்களுக்கு பொது மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் இலவச மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையான ஆலோசனைகள் மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளரும் உளுந்தூர்பேட்டை நகர மன்ற துணைத் தலைவருமான வைத்தியநாதன், துறை சார்ந்த அரசு அதிகாரிகள், மாவட்ட கவுன்சிலர் ராஜேஸ்வரி ராஜா, ஊராட்சி மன்ற தலைவர் பாலசிங்கம், மனோகர், வெங்கடேஷ் உள்ளிட்டோர் மற்றும்கழகநிர்வாகிகள்கலந்துகொண்டு முகாமின் சிறப்பை அதிகரித்தனர். மேலும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மருத்துவ சேவைகளைப் பெற்றனர்.

பொதுமக்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் நோக்கில் தமிழக அரசு தொடர்ந்து இவ்வகை மருத்துவ முகாம்களை நடத்தி வருவது வரவேற்கத்தக்கது என கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.



கிருஷ்ணகிரி நகருக்கு வருகை தந்த திராவிட கழகத் தலைவர் கீ.வீரமணி அவர்களிடம் கே. ஆர்.பி. அணையில் பெருந்தலைவர் காமராஜர் சிலை அமைக்க தமிழக முதல்வரிடம் பரிந்துரைக்குமாறு வேண்டி முன்னாள் காங்கிரஸ் தலைவர் எல். சுப்பிரமணியன் கோரிக்கை மனுவினை கொடுத்தார்.



ஸ்ரீவில்லிபுத்தூர் டிசம்பர் 29 ஸ்ரீவில்லிபுத்தூரில் கோதை நாச்சியார் தொண்டர் குழாம் சார்பாக கடந்த 6 ஆண்டுகளாக தாயார் ஆண்டாளுக்காக முப்பதும் தப்பாமே திருப்பாவை முற்றோதல் மற்றும் சீர்வரிசை திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில்ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள் தலைமையில் திருப்பாவை முற்றோதல் விழா ஏராளமான பெண்கள் பங்கேற்றனர்.



# தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டம் - கோமாரி நோய் தடுப்பூசி 8ஆவது சுற்று துவக்கம்!

திருப்பத்தூர் டிச.30

திருப்பத்தூர் மாவட்டத்தில் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் கோமாரி நோய் தடுப்பூசி செலுத்தும் எட்டாவது சுற்று முகாம் துவக்க விழா நடைபெற்றது. இந்த முகாமை திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி மற்றும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தேவராஜ் ஆகியோர் இணைந்து தொடக்கி வைத்தனர். இந்த தடுப்பூசி முகாம் 29.12.2025 முதல் 18.01.2026 வரை நடைபெறும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய செயலாளர் கவிதா தண்டபாணி கலந்து கொண்டு முகாமின் முக்கியத்துவம்குறித்துபேசினார்.இம்முகாமின் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி செலுத்தப்பட்டது. மேலும், சுமார் 50 நபர்களுக்கு மாடுகளுக்கான தாது உப்புக்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் துணை அலுவலர் சீனிவாசன் தலைமையில் பணியாளர்கள் பங்கேற்று, கிராமப்பகுதிகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மாடுகளை பிடித்துகொண்டுவந்துதடுப்பூசிசெலுத்தி அனுப்பினர்.

கால்நடைகளின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதுடன், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



# பஞ்சனம்பட்டியில் ஈரநிலப்பறவைகள் கணக்கெடுப்பு!

## மாவட்ட வன அலுவலர் மகேந்திரன் துவக்கி வைத்தார்!!

திருப்பத்தூர் டிச.30

தமிழ்நாடு வனத்துறை மூலம் தமிழ்நாடு முழுவதும் ஒருங்கிணைந்த ஈரநில பறவைகள் கணக்கெடுப்பு 27.12.2025 மற்றும் 28.12.2025 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

இந்நிகழ்வை, திருப்பத்தூர் மாவட்ட வன அலுவலர் மகேந்திரன் திருப்பத்தூர் தாலுக்கா, பஞ்சனம்பட்டி கிராம ஏரியில் நடந்த பறவைகள் கணக்கெடுப்பு பணிகளில் கலந்து கொண்டு துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து,

திருப்பத்தூர் வனக் கோட்டத்துக்கு உட்பட்ட திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், ஆலங்காயம், சிங்காரப்பேட்டை ஆகிய 5 வனச்சரகங்களில் 26 ஈர நிலங்கள் அடையாளம் காணப்பட்டு, அங்கெல்லாம் பறவைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடந்த ஈர நில பறவைகள் கணக்கெடுப்பில், பல வகை பறவை யினங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

திருப்பத்தூர் மாவட்டத்தில் வனத்துறை மூலம் 2025ம் ஆண்டுக்கான ஈர நில பறவைகள் கணக்கெடுப்புப் பணி நடந்தது.ஆம்பூர் வனச்சரக அலுவலர் பாபு, வாணியம்பாடி வனச்சரக அலுவலர் குமார், திருப்பத்தூர் வனச்சரக அலுவலர் சோலைராஜன்,ஆலங்காயம் வனச்சரகஅலுவலர்,சிங்காரப்பேட்டை வனச்சரக அலுவலர், வனத்துறையினர்,பறவை நிபுணர்கள்,பறவை இனம்கண்டறிபவர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள், தன்னார்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் கூடலூரில் லயன்ஸ் கிளப் சார்பில் இலவச மருத்துவ முகாம் 1வது மைல் தனியார் அரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சியை கூடலூர் துணை காவல் கண்காணிப்பாளர் வசந்தகுமார் துவக்கி வைத்தார். கூடலூர் லயன்ஸ் கிளப் மற்றும் இக்ரா மருத்துவமனை இனைந்து நடத்திய இலவச மருத்துவ முகாமில் பொது மருத்துவம் மற்றும் இலவச கண்பரிசோதனை நடந்தது.

# ஆம்பூர் அருகே மரம் அறுக்கும் போது தொழிலாளி மீது தென்னை மரம் விழுந்து உயிரிழப்பு!



ஆம்பூர்.டிச.30

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த வீராங்குப்பம் பகுதியில் சங்கர் என்பவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் உள்ள தென்னை மரம் உள்ளிட்ட பல்வேறு மரங்களை வெட்டுவதற்காக மரம் அறுக்கும் தொழிலாளர்கள் 5க்கும் மேற்பட்டோர் மரங்கள் வெட்டும் பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக மரம் அறுக்கும் தொழிலாளி பெரிய வெங்கட சமுத்திரம் பகுதியை சேர்ந்த சுரேஷ் (42) என்பவர் மீது தென்னை மரம் விழுந்து தலையில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற உமராபாத் காவல்துறையினர் பிரேதத்தை கைபற்றி பிரேத பரிசோதனைக்காக ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இறந்த சுரேஷ் கடந்த சில மாதங்களுக்கு முன்பு குடும்ப பிரச்சினை காரணமாக மனைவி மீது கொடுத்த புகாரை காவல் நிலையத்தில் எடுக்கவில்லை எனக் கூறி காவல் நிலைய வளாகத்தில் இருந்த தென்னை மரத்தில் ஏறி தற்கொலை மிரட்டல் விடுத்தது குறிப்பிடத்தக்கது.

## சங்ககிரியில்

# சிறுவர்களுக்கு கராத்தே போட்டி!





சங்ககிரி, டிச. 30

சங்ககிரி சந்தைப்பேட்டை அருகில் உள்ள சுப்ரீம் அகாடமி கராத்தே தற்காப்பு கலை பயிற்சி நிலையத்தில் விளையாட்டு விழா நடந்தது. கராத்தே ஆசிரியர் அர்ஜூனன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பாஜக மாவட்ட பொருளாளர் ரமேஷ்காந்த்திக் முன்னிலை வகித்தார். பிரச்சாரபிரிவு மாவட்ட செயலாளர் திவாகர், சங்ககிரி மண்டல் பொதுச் செயலாளர் பரணிதரன், அமுதசுடர் அறக்கட்டளை தலைவர் சத்யபிரகாஷ், வேளாண்மை துறை விக்னேஷ், சிட்டி யூனியன் பேங்க் பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில்ஆறுமுதல்20வயதுக்குஉட்பட்டசிறுவர்களுக்கு பிரிவு வாரியாக ஓடு உடைக்கும் போட்டிகள் நடந்தது.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

# ரெயில் முன் பாய்ந்து வாலிபர் தற்கொலை!



மொரப்பூர், டிச 30

தர்மபுரி மாவட்டம், மொரப்பூரை அருகில் உள்ள, சிந்தல்பாடி கிராமத்தை சேர்ந்தவர் பொன்னுசாமி. இவரது மகன், உதயகுமார். (25) வாலிபர் ரயில் முன் மோதி சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தார். இவரது உடலை சேலம் ரயில்வே கோட்ட போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தர்மபுரி அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தனர். உதயகுமார் சாவு குறித்து விசாரணைமேற்கொண்டுவருகின்றனர், ரெயில் முன்பாய்ந்து வாலிபர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகம் ஏற்படுத்தி உள்ளது ,

## மாரண்டஅள்ளி அருகே துணிகரம்:

# வீட்டின் பூட்டை உடைத்து 20 பவுன் நகை கொள்ளை!

பாலக்கோடு.டிச.30

தர்மபுரிமாவட்டம், மாரண்டஅள்ளி அடுத்த நல்லாம்பட்டி கிராமத்தை சேர்ந்த கூலி தொழிலாளி முனிராஜ். இவரது மனைவி வெண்ணிலா.

முனிராஜ் வெளியூரில் கூலி வேலை செய்து வருகிறார். வெண்ணிலா நேற்று காலை வீட்டை பூட்டி விட்டு கூலி வேலைக்கு சென்றார். வேலை முடிந்து மதியம் வீட்டிற்க்கு வந்து பார்த்த போது மர்ம நபர்கள் வீட்டின் பூட்டை உடைத்து பீரோவில் வைத்திருந்த செயின், மோதிரம் உள்ளிட்ட 20 பவுன் தங்க நகைகளை கொள்ளையடித்து சென்றது தெரிய வந்தது,

இது குறித்து மாரண்டஅள்ளி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# கோவை மாவட்ட அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் புதிய நிர்வாகிகள் தேர்வு குறித்த ஆலோசனை கூட்டம்!



கோவை,டிச.30

அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் 2026 27 ஆம் ஆண்டிற்கான கோவை மாவட்ட புதிய நிர்வாகிகளை தேர்வு செய்வது தொடர்பான ஆலோசனை கூட்டம் கொடிசியா அருகில் உள்ள ஜே.ஆர். அரங்கில் நடைபெற்றது. அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் நிறுவனர் தலைவர் டாக்டர் ஹென்றி மற்றும் தேசிய ஆலோசனை குழு தலைவர் நேரு நகர் நந்து ஆகியோரின் ஆலோசனையின் பேரில் எட்டாவது நிர்வாக தேர்வாக நடைபெற்ற இதில்,தேசிய செயல் செயலாளர் செந்தி்ல் குமார் தலைமை தாங்கினார். தேசிய இணை செயலாளர் கண்ணன் என்கிற பாலசண்முகம் மற்றும் தேசிய துணை செயலாளர் பாலசுப்ரமணி,ஆலோசனை குழு உறுப்பினர் நிவாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து புதிய உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு தகவல் அறியும் உரிமை சட்டம் குறித்த கையேடு வழங்கப்பட்டது.

கூட்டத்தில் புதிய மாவட்ட தலைவராக அந்தோணி சாமி, பொது செயலாளர் மெடிக்கல் நாராயணன், மாவட்ட செயல் செயலாளர் ஜெகந்நாதன், ,செயலாளர் மாவட்ட வளர்ச்சி சண்முகம் உட்பட 30 க்கும் மேற்பட்ட புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். நிகழ்ச்சியை ஃபெயிரா கூட்டமைப்பின் ஆர்க்கிடெக்ட் மற்றும் பொறியாளர் குழுவின் மாநில செயற்குழு உறுப்பினர் பொறியாளர் தேஜஸ்வினி தொகுத்து வழங்கினார். கூட்டத்தில்மாநிலதுணைதலைவர்சுரேஷ்குமார்,மாநில செயற்குழு தலைவர் ராமநாதன்,கோவை மாவட்ட தலைமை நிலைய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி,கனலி என்கிற சுப்பு செந்தில் குமார் உட்பட தேசிய,மாநில,மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



# தேசிய அளவிலான தரைப்பந்து போட்டியில் பாலக்கோடு பள்ளி மாணவன் சாதனை!

## திமுக மாநில நிர்வாகி நிதி உதவி வழங்கினார்!!

பாலக்கோடு,டிச.30

பீகார் மாநிலத்திற்கு சென்று தேசிய அளவிலான இரண்டாம் இடம் பெற்ற மாணவன் சந்துருக்கு திமுக மாநில நிர்வாகி ஊக்கத்தொகை வழங்கி பாரட்டு தெரிவித்தார்.

பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி காரிமங்கலம் மேற்கு ஒன்றியம் ஐக்க சமுத்திரம் ஊராட்சி கருக்கன அள்ளி கிராமத்தில் வசித்து வரும் லாரி ஓட்டுநர் பெரியசாமியின் மகன் சந்துரு அவர்கள் தேசிய அணியில் பங்கு பெற்று விளையாடி வருகிறார் இந்நிலையில் தேசிய அளவில் நடைபெற்ற தரைப்பந்து போட்டியில் தேசிய அளவில் இரண்டாம் இடத்தை பெற்று இவர் சார்ந்த அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்த தகவலை அறிந்த மாநில விவசாய அணி துணைச் செயலாளர் சூடப்பட்டி சுப்பிரமணி அவர்கள் லாரி ஓட்டுநர் பெரியசாமி மணிமேகலை குடும்பத்தினரை நேரில் அணுகி அவர்களின் குடும்பம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதை அறிந்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் பெயரில் மாணவன் சந்துருவை பாராட்டி ஊக்கத்தொகை வழங்கி மேலும் பல்வேறு போட்டிகளில் தேசிய அளவில் கலந்து கொண்டு பல்வேறு விருதுகளை பெற வேண்டும் என வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் காரிமங்கலம் மேற்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் கோபால், மாவட்ட ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர்கள் துரைமுருகன், ஜேஎம் சக்தி, சூடப்பட்டி கிளை செயலாளர் சிவகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.



## திருப்பத்தூரில் நெடுஞ்சாலை துறை அமைச்சர் முன்னிலையில்

# 50-க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இருந்து விலக தி.மு.க.வில் இணைந்தனர்!

திருப்பத்தூர் டிச.30

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த நத்தம் பகுதியை சேர்ந்த 100 க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இருந்து விலக நத்தம் ஊராட்சி மன்ற தலைவர் ரங்கசாமி குமார் ஏற்பாட்டில்,

திருப்பத்தூர் சட்டமன்றத் உறுப்பினர் நல்லதம்பி தலைமையில் திருப்பத்தூர் ரயில்வே ஸ்டேஷன் சாலையில் அமைந்துள்ள அரசு சுற்றுலா மாளிகையில் தமிழக நெடுஞ்சாலை துறை மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் எ.வ. வேலு முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

மேலும் அதிமுகவில் இருந்து விலகி திமுகவில் சேர்ந்தவர்களுக்கு வாழ்த்துக்களை கூறினார்.

உடன் இந்த நிகழ்ச்சியின் போது நாடாளுமன்ற உறுப்பினர் திருவண்ணாமலை சி என் அண்ணாதுரை மாவட்ட செயலாளரும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜ், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ நல்லதம்பி. திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ் ராஜேந்திரன் பொதுக்குழு உறுப்பினர் அரசு டி ரகுநாத் . கந்திலி ஒன்றிய செயலாளர் மோகன் ராஜ்.மாவட்ட நெசவாளர் அணி தசரதன். கூட்டுறவு. குலோத்துங்கள். டி எஸ் மாதேஸ்வரன்நகர இளைஞரணி அமைப்பாளர் சதீஷ் .சங்கர்.மாவட்ட ஒன்றிய, நகர, பொறுப்பாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் கிழக்கு மாவட்டம் தாராபுரம் மேற்கு ஒன்றியத்துக்குட்பட்ட தளவாய் பட்டினம் ஊராட்சியில் பாகம் எண் 199,200,58,59, என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டத்தில் தாராபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் தனசேகர் கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு வெற்றிக்கான ஆலோசனைகளை வழங்கினார், மற்றும் இளைஞர்அணிமாணவர்அணிமற்றும்சார்புஅணிகளின்நிர்வாகிகள்கழகஉடன்பிறப்புகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# ஆம்பூர் அருகே பள்ளி சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த நபர் போக்சோ சட்டத்தின் கீழ் கைது!

ஆம்பூர். டிச.30

திருப்பத்தூர்மாவட்டம் ஆம்பூர் அடுத்த பெரியாங்குப்பம் பகுதியைச் சேர்ந்த 12 வயது சிறுமி. அதே பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்து வருகிறார்.

இந்நிலையில் அதே பகுதியை சேர்ந்த டீக்கடை உரிமையாளர் செல்வம் என்பவர் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததை அறிந்து அவரை கிராம மக்கள் சிறைப்பிடித்து காவல் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

சம்பவம் குறித்து ஆம்பூர் அனைத்து மகளிர் காவல்துறையினர்வழக்கு



பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் பள்ளி விடுமுறை என்பதால் அப்பகுதியில் விளையாட வந்த சிறுமியை செல்வம் (62) என்பவர் ஆசை வார்த்தை கூறி தொடர்ந்து வீட்டில் வைத்து பாலியல் வன்கொடுமை செய்தது விசாரணையில் தெரிய வந்தது.

இதனை தொடர்ந்து அவர் மீது போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.